**டிசம்பர் – 27**

# TNPSC துளிகள்

- இந்தியப் பிரதமர் அசாமின் திப்ருகார் மாவட்டத்தில் உள்ள நம்ரூப்பில் 10,601 கோடி ரூபாய் மதிப்பிலான உரத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார்.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது சமுத்திர பிரதாப் என்ற அதன் முதல் மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பலை (PCV) அறிமுகப்படுத்தியது.
- டேராடூனில் உள்ள இந்திய வனவியல் ஆராய்ச்சி மற்றும் கல்வி சபை (ICFRE), சுரங்க நோக்கங்களுக்காக ஆரவல்லி மலைத்தொடரின் ஒரு பகுதியாக தகுதி பெறும் மலைகள் குறித்து மாவட்ட வாரியான அறிக்கையைத் தயாரிக்க உள்ளது.
- இராஜஸ்தான் சட்டமன்றச் சபாநாயகர் ஸ்ரீ வாசுதேவ் தேவ்னானி எழுதிய "Sanatan Sanskriti Ki Atal Drishti" என்ற புத்தகத்தை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வெளியிட்டார்.

# தேசியச் செய்திகள்

## தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியாவின் பால்வளத் துறை கொள்கை




- இந்தியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (FTA) இறுதி செய்துள்ளன.
- FTA ஒப்பந்தத்தில் பால் பொருட்கள் ஆனது கட்டணக் குறைப்பு அல்லது வரி இல்லாத அணுகலின் கீழ் சேர்க்கப்படவில்லை.
- இந்தியா வர்த்தக ஒப்பந்தங்களில் பால்வளத் துறையை சேர்க்கக் கூடாது என்ற ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் 80 மில்லியனுக்கும் அதிகமான குடும்பங்கள் வருமானத்திற்காக பால் பண்ணையைச் சார்ந்துள்ளன.

- இந்தியாவில் பெரும்பாலான பால் உற்பத்தியாளர்கள் இரண்டு முதல் மூன்று கால்நடைகளை வைத்திருக்கும் சிறு விவசாயிகள் ஆவர்.
- இந்தியாவில் பால்வள உற்பத்தி துறையானது உழைப்பு மிகுந்தது என்பதோடு அது பெருமளவில் கிராமப் புறங்களிலேயே பரவியுள்ளது.
- இந்தியாவின் தனி நபர் பால் கிடைக்கும் தன்மை உலகச் சராசரியை விட அதிகமாக உள்ளது.
- இந்தியாவில் பால்வளத் துறை பணியாளர்களில் சுமார் 70% பெண்கள் ஆவர்.
- பால்வளத் துறையானது ஏற்றுமதித் தொழிலாக அல்லாமல், வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆதரவுத் துறையாக செயல்படுகிறது.
- நியூசிலாந்தின் பால்வளத் துறை ஏற்றுமதி சார்ந்தது மற்றும் மூலதனம் மிகுந்தது.
- இந்தியாவின் பால் பொருட்கள் துறை உள்நாட்டில் கவனம் செலுத்துகிறது மற்றும் கூட்டுறவு அடிப்படையிலானது.
- FTA என்பது உள்நாட்டு விற்பனைக்கு அல்லாத வகையில் மறு ஏற்றுமதிக்கு மட்டுமே பால் உள்ளீடுகளுக்கு வரி இல்லாத அணுகலை அனுமதிக்கிறது.
- எதிர்கால வர்த்தக ஒப்பந்தங்களில் பால் பொருட்கள் அனுமதிக்கப்பட்டால், பேச்சு வார்த்தை நடத்தும் உரிமை விதி இந்த ஒப்பந்தத்தில் அடங்கும்.
- மற்ற நாடுகளுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா அதே பால்வளத் துறை விலக்குக் கொள்கையைப் பின்பற்றுகிறது.
- கிராமப்புற வருமானம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பைப் பாதிக்காமல் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதே FTA ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வனவிலங்குப் பாதுகாப்பு 2025




- இரயில் பாதைகளில் வனவிலங்குகள் இறப்பதைத் தடுக்க இந்திய இரயில்வே

நிர்வாகம் செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

- செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்பட்ட ஒளிப்படக் கருவிகள் தண்டவாளங்களுக்கு அருகில் உள்ள விலங்குகளைக் கண்டறிந்து, இரயில் எஞ்சின் ஓட்டுநர்களுக்கு /லோகோ பைலட்டுகளுக்கு சுமார் 500 மீட்டர் தொலைவிற்கு முன்னதாகவே எச்சரிக்கைகளை அனுப்புகின்றன.
- காடு மற்றும் யானை வழித்தடப் பகுதிகளில் இரயில்களை மெதுவாக இயக்க அல்லது நிறுத்த இந்த அமைப்பு உதவுகிறது.
- தரை அதிர்வுகள் மூலம் யானைகளின் நடமாட்டத்தைக் கண்டறிய ஒரு ஒலி அமைப்பு தொகுப்பு (DAS) பயன்படுத்தப்படுகிறது.
- வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே நிர்வாகத்தின் கீழ் சுமார் 141 வழித்தட கிலோ மீட்டர்களில் இந்த அமைப்பு செயல்படுகிறது.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது அதன் வலையமைப்பு முழுவதுமாக 1,122 கிலோ மீட்டருக்கு இந்த அமைப்பை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

## விளையாட்டுத் துறைக்கான உள்ளகப் பயிற்சிக் கொள்கை 2025




- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் (MYAS) ஆனது ஒரு விரிவான உள்ளகப் பயிற்சிக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.
- இந்தக் கொள்கையின் கீழ், MYAS மற்றும் அதன் நிறுவனங்கள் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் 452 உள்ளகப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- இந்திய விளையாட்டு ஆணையம் (SAI), தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு முகமை (NADA) மற்றும் தேசிய ஊக்கமருந்துச் சோதனை ஆய்வகம் (NDTL) போன்ற அமைப்புகளில் இந்த உள்ளகப் பயிற்சிகள் நடைபெறும்.
- இந்தத் திட்டத்தில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கு வாய்ப்பு அளிக்கப் படும்.
- உள்ளகப் பயிற்சிகளில் விளையாட்டு நிர்வாகம், விளையாட்டு அறிவியல், ஊக்க

மருந்து எதிர்ப்பு மற்றும் நிகழ்வு மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

- இந்தக் கொள்கையானது கேலோ பாரத் நிதி 2025 மற்றும் தேசிய விளையாட்டுக் கொள்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் மிகப்பெரிய நீர்மின் நிலையம்




- 250 மெகாவாட் திறன் கொண்ட சுபன்சிரி கீழ்மட்ட நீர்மின் நிலையத்தின் இரண்டாம் அலகு அருணாச்சலப் பிரதேசத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- சுபன்சிரி கீழ்மட்ட நீர்மின் நிலையம் ஆனது, ஒவ்வொன்றும் 250 மெகாவாட் திறன் கொண்ட எட்டு அலகுகளுடன் மொத்தம் 2,000 மெகாவாட் திறன் கொண்டது.
- இது வடகிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய நீர்மின் நிலையமாகும்.
- இந்த நிலையம் சுபன்சிரி ஆற்றில் கட்டப்பட்ட ஒரு நதி சார் நீர்மின் நிலையமாகும்.
- 116 மீட்டர் உயரம் கொண்ட இந்த நிலையம் வடகிழக்கு இந்தியாவில் மிகப்பெரிய அணையைக் கொண்டுள்ளது.
- இந்த அணை கீழ்மட்டப் பகுதிகளில் வெள்ள அபாயத்தைக் குறைக்க வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

## சக்தி அறிஞர்கள் புத்தாய்வு மாணவர் உதவித் தொகை திட்டம்


- தேசிய மகளிர் ஆணையம் ஆனது சக்தி அறிஞர்கள் புத்தாய்வு மாணவர் உதவித் தொகை திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 21 முதல் 30 வயதுடைய இளம் இந்திய ஆராய்ச்சியாளர்களை ஆதரிப்பதற்காக ஆறு மாத மானிய அடிப்படையிலான ஆராய்ச்சி புத்தாய்வு மாணவர் உதவித் தொகை திட்டம் ஆகும்.
- பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதார அதிகாரமளித்தல், தலைமைத்துவம், இணைய வெளிப் பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகள் போன்ற பெண்கள் சார்ந்தப் பிரச்சினைகள் குறித்த கொள்கை சார்ந்த, பலதரப்பட்ட ஆராய்ச்சிக்கு இந்தப் புத்தாய்வு மாணவர் உதவித் தொகை திட்டம் 1 லட்சம் ரூபாய் வழங்குகிறது.
- தகுதியான விண்ணப்பதாரர்கள் பட்டப் படிப்பு முடித்திருக்க வேண்டும் என்பதோடு மேலும் அது தொடர்புடைய துறைகளில் முதுகலைப் பட்டம், ஆய்வியல் நிறைஞர் (M.Phil) அல்லது முனைவர் பட்டம் (PhD) பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்

படுகிறது.

- பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கும் முன்னேற்றம் தொடர்பான ஆராய்ச்சி செயல் படுத்தலை உறுதி செய்வதற்கும் நிதி வழங்கீடானது பல்வேறு கட்டங்களாக வழங்கப் படுகிறது.
- இந்த உதவித்தொகை இந்தியாவில் பெண்களுக்கான ஆதார அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் ஆதரவுக் கொள்கை மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## தேசிய மின்னல் செயல்பாடுகள் குறித்த மாநாடு 2025




- மின்னல் தொடர்பான பேரழிவுகளைப் பற்றி விவாதிப்பதற்காக 9வது தேசிய மின்னல் மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது.

- இந்த மாநாடு இந்தியாவில் ஒரு பெரிய தீவிர வானிலை அபாயமாக உள்ள மின்னல் அபாயங்கள் குறித்து கவனம் செலுத்தியது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Lightning: Atmospheric Electricity and Extreme Weather Events" என்பதாகும்.
- இந்த நிகழ்வின் போது 7வது வருடாந்திர மின்னல் அறிக்கை வெளியிடப்பட்டது.
- இது CROPC (பருவநிலை தகவமைப்பு கண்காணிப்பு அமைப்புகள் மேம்பாட்டு சபை), IMD (இந்திய வானிலை ஆய்வுத் துறை), NRSC–ISRO (தேசிய தொலைதூர உணர் நுட்ப மையம்–இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு) மற்றும் NDMA (தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம்) ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது.
- மின்னல் என்பது மேகங்களுக்கு இடையில் அல்லது மேகங்களுக்கும் தரைக்கும் இடையில் மின்சார ஆற்றல் வெளியேற்றப்படுவதால் ஏற்படும் ஓர் இயற்கை நிகழ்வு ஆகும்.
- மின்னல் ஆனது இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது.
- இந்தியாவில் மின்னல் தாக்குதல்கள் 2019 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சுமார் 400% அதிகரித்துள்ளன.
- அதிக ஆபத்துள்ள மாநிலங்களில் இராஜஸ்தான், குஜராத், ஹரியானா, பஞ்சாப், டெல்லி, மத்தியப் பிரதேசம், பீகார் மற்றும் ஒடிசா ஆகியவை அடங்கும்.
- இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) டாமினி, மௌசம் மற்றும் சச்செட் கைபேசி செயலிகள் மூலம் மின்னல் எச்சரிக்கைகளை வழங்குகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## புதிய H-1B நுழைவு இசைவுச் சீட்டு முறை 2025




- திருத்தப்பட்ட புதிய விதிகளின் கீழ், H-1B நுழைவு இசைவுச் சீட்டுகள் இதன்பின் சீரற்ற நிர்ணயம் மூலம் வழங்கப் படாது.
- அதற்குப் பதிலாக, ஊதிய நிலைகள் மற்றும் அந்தப் பணியின் திறன் தேவைகளின்

அடிப்படையில் விண்ணப்பங்கள் இனி மதிப்பிடப்படும்.

- புதிய விதிகள் என்பவை 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 ஆம் தேதியன்று அமலுக்கு வரும் என்பதோடு அவை 2027 ஆம் நிதியாண்டின் H-1B வரம்பு நிர்ணயப் பதிவு பருவத்திற்குப் பொருந்தும்.
- தற்போது, இந்தத் திட்டம் ஆண்டுதோறும் 65,000 H-1B நுழைவு இசைவுச் சீட்டுகளை அனுமதிக்கிறது.
- ஆண்டுதோறும் வழங்கப்படும் H-1B நுழைவு இசைவுச் சீட்டுகளில் தற்போது இந்தியர்களின் பங்கு 70 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.

### சீனா-இந்தியா WTO சர்ச்சை

- சூரிய சக்தி துறை கொள்கைகள் தொடர்பாக உலக வர்த்தக அமைப்பில் (WTO) சீனா இந்தியாவுக்கு எதிராகப் புகார் அளித்தது.
- இந்தியாவின் ஒளி மின்னழுத்த (சூரிய சக்தி) மானியங்கள் குறித்து உலக வர்த்தகக் அமைப்பின் கட்டமைப்பின் கீழ் சீனா ஆலோசனைகளை நாடியது.
- இந்தியாவின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்ட கட்டண உறுதிப்பாடுகள் மற்றும் தேசிய நடவடிக்கை விதிகளை மீறுவதாக அது கூறியது.
- இந்தக் கொள்கைகள் இறக்குமதி ஈடு மானியங்களாகச் செயல்பட்டு, உள்நாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாக செயல்பட்டதாகவும் சீனா குற்றம் சாட்டியது.
- இந்தப் புகார் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் மின்சார வாகனம் (EV) மற்றும் மின்கல மானியங்கள் மீதான முந்தைய வழக்கைத் தொடர்ந்து முன் வைக்கப் பட்டது.





# பொருளாதாரச் செய்திகள்

### 2025–26 ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான NUDGE பிரச்சாரம்

- வருமான வரித் துறையானது 2025–26 ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான (AY) NUDGE

(வழிகாட்டுதல் மற்றும் செயல்படுத்துதல் தரவுகளின் ஊடுருவ இயலாதப் பயன்பாடு) பிரச்சாரத்தைத் தொடங்கியது.

- தகுதியற்றக் கழிப்புகள் மற்றும் விலக்குகளை வரி செலுத்துவோர் தானாக முன்வந்து சரி பார்த்து, சரிசெய்யுமாறு இந்தப் பிரச்சாரம் கோருகிறது.
- வருமான வரித் தாக்கல்களில் (ITRs) உள்ள முரண்பாடுகளைக் கண்டறிய இது தரவுப் பகுப்பாய்வு மற்றும் இடர் மதிப்பீட்டைப் பயன்படுத்துகிறது.
- இந்தப் பிரச்சாரம் ஆலோசனை சார்ந்தது மற்றும் தண்டனைக்குரியது அல்ல.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆகாஷ்-NG எறிகணை 2025





- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகாஷ்-NG எறிகணை அமைப்பின் பயனர் மதிப்பீட்டுச் சோதனைகளை (UET) நிறைவு செய்துள்ளது.
- ஆகாஷ்-NG (அடுத்த தலைமுறை நுட்பம்) என்பது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நிலப்பரப்பிலிருந்து வானில் ஏவப்படும் எறிகணையாகும்.

- ❖ இது விமானம், ஆளில்லா விமானங்கள் மற்றும் சீர்வேக எறிகணைகளை அழிக்கப் பயன்படுகிறது.
- ❖ இலக்குகளை மிகவும் துல்லியமாக நிர்ணயிக்க இந்த எறிகணையில் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட ரேடியோ அதிர்வெண் (RF) உணர்வி உள்ளது.
- ❖ இது நீண்ட தூரச் செயல்பாடுகள் மற்றும் விரைவான செயல்பாட்டிற்காக இரட்டை உந்துதல் கொண்ட திட எரிபொருள் சார்ந்த ஏவு அமைப்பு மோட்டாரைப் பயன்படுத்துகிறது.

# மாநிலச் செய்திகள்

## வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையில் சீர்திருத்தம் - மத்தியப் பிரதேசம்

- ❖ மத்தியப் பிரதேச அரசானது 2026-27 ஆம் நிதியாண்டிலிருந்து ஒரு தொடர் வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையை அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ தொடர்ச்சியாக 2026-27, 2027-28, மற்றும் 2028-29 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான தோராயமான மதிப்பீடுகள் இந்த வரவு செலவு மதிப்பீட்டில் அடங்கும்.
- ❖ 2025-26 ஆம் ஆண்டின் மூலதனச் செலவினம் 82,513 கோடி ரூபாய் ஆகும் என்பதோடு இது இம்மாநிலத்தில் இதுவரையில் பதிவாகாத அதிகபட்சமாகும்.
- ❖ தொடர் வரவு செலவு திட்ட அறிக்கைகள் செயல்திறன் மற்றும் மாறிவரும் பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் அவ்வப்போது திருத்தங்களை அனுமதிக்கின்றன.
- ❖ வரவிருக்கும் வரவு செலவு மதிப்பீடுகள் வேளாண்மை, விவசாயிகளின் வருமானம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியில் கவனம் செலுத்தும்.





## பொது-தனியார் கூட்டாண்மை மாதிரியின் கீழ் மாதிரி மருத்துவக் கல்லூரிகள்


- ❖ மத்தியப் பிரதேசத்தின் பழங்குடியின மாவட்டங்களில் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் கீழ் இந்தியா தனது முதல் மருத்துவக் கல்லூரிகளை அறிவித்தது.
- ❖ தார், பெதுல், கட்னி மற்றும் பன்னா ஆகிய இடங்களில், ஏற்கனவே உள்ள மாவட்ட

மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டு நான்கு கல்லூரிகள் அமைக்கப்பட திட்டமிடப் பட்டுள்ளன.

- PPP மாதிரி ஆனது அரசு மற்றும் தனியார் துறையின் கூட்டு முதலீடு மற்றும் நிர்வாகத்தை அனுமதிக்கிறது.
- அரசாங்கச் சலுகைகளில் செயல்திறன் இடைவெளி நிதி (VGF), இந்திய உள்கட்டமைப்பு திட்ட மேம்பாட்டு நிதி (IIPDF), நீண்ட கால கடன் ஆதரவு மற்றும் 100% வரை வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) ஆகியவை அடங்கும்.
- பழங்குடியினப் பகுதிகளில் மருத்துவக் கல்வி மற்றும் பொது சுகாதார சேவைப் பரவலை வலுப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.




## மேற்கூரையில் நிறுவப்பட்ட சூரிய மின் உற்பத்தி அமைப்புகள் 2025




- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி குஜராத் மாநில அரசானது ஐந்து லட்சத்திற்கும் மேலான குடியிருப்புசார் மேற்கூரை சூரிய மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவியுள்ளது.
- இம்மாநிலத்தில் நிறுவப்பட்ட மொத்த மேற்கூரை சூரிய மின் உற்பத்தி திறன் 1,879 மெகாவாட் ஆகும்.

- 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 10 லட்சம் நிறுவல்களை அடைய இந்த மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- மேற்கூரை சூரிய மின் உற்பத்தித் திட்டத்தின் கீழ் குடியிருப்பு வீடுகள் 3,778 கோடி ரூபாய் மானியங்களைப் பெற்றுள்ளன.
- கொள்கை சீர்திருத்தங்கள் ஆனது வங்கி கட்டணங்கள் இல்லாமல், குடும்பங்கள் உபரி மின்சாரத்தை மின் கட்டமைப்பிற்கு விற்க அனுமதிக்கின்றன.

### இராஷ்ட்ர பிரேர்ண ஸ்தலம்

- பிரதமர் லக்னோவில் அமைக்கப்பட்டுள்ள இராஷ்ட்ர பிரேர்ண ஸ்தலத்தினைத் திறந்து வைத்தார்.
- இது முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் 101வது பிறந்தநாளைக் குறிக்கிறது.
- இதில் வாஜ்பாய், டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி மற்றும் தீனதயாள் உபாத்யாயா ஆகியோரின் 65 அடி உயர வெண்கல சிலைகள் இடம்பெற்றிருந்தன.
- தாமரை வடிவிலான அதி நவீன அருங்காட்சியகம் இந்தியாவின் தேசியப் பயணம், பாரதிய ஜன சங்கத்தின் (BJS) உருவாக்கம் மற்றும் டிஜிட்டல் மற்றும் அதிவேக தொழில் நுட்பங்கள் மூலம் இந்தத் தலைவர்களின் பங்களிப்புகளைக் காட்சிப் படுத்தியது.
- இது லக்னோ மேம்பாட்டு ஆணையத்தின் (LDA) பசந்த் குஞ்ச் என்ற திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டது என்பதோடு இதன் கட்டுமானம் 2022 ஆம் ஆண்டில் தொடங்கியது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### வினோத் குமார் சுக்லாவின் மறைவு

- இந்தி மொழிக் கவிஞரும் புதின ஆசிரியருமான வினோத் குமார் சுக்லா சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் காலமானார்.
- 1937 ஆம் ஆண்டில் (இன்றைய சத்தீஸ்கரின்) இராஜ்நந்த்கானில் பிறந்த இவர், 1971 ஆம் ஆண்டில் தனது எழுத்து துறை வாழ்க்கையைத் தொடங்கினார்.
- 2024 ஆம் ஆண்டில் ஞானபீட விருதை வென்ற அவர், இந்த விருதைப் பெற்ற

சத்தீஸ்கரைச் சேர்ந்த முதல் எழுத்தாளர் இவர் என்ற பெருமையைப் பெற்றார்.

❖ நௌகர் கி கமீஸ் மற்றும் தீவார் மே ஏக் கிட்கி ரெஹ்தி தி ஆகியவை அவரது நன்கு அறியப் பட்ட படைப்புகள் ஆகும்.




## இராஷ்ட்ரிய விஞ்ஞான புரஸ்கார் விருதுகள் 2025




❖ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான இராஷ்ட்ரிய விஞ்ஞான புரஸ்கார் விருதை புது டெல்லியின் இராஷ்டிரபதி பவனில் வழங்கினார்.

❖ விக்யான் ரத்னா, விக்யான் ஸ்ரீ, விக்யான் யுவா மற்றும் விக்யான் குழு ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் மொத்தம் 24 விருதுகள் வழங்கப்பட்டன.

❖ இயற்பியல், வேதியியல், மருத்துவம், வேளாண்மை, அணு ஆற்றல் மற்றும் விண்வெளி அறிவியல் உள்ளிட்ட சுமார் 13 அறிவியல் துறைகளில் மேற்கொள்ளப்பட்டப் பங்களிப்புகளுக்கு விருது வழங்கி அங்கீகரிக்கப்பட்டன.

❖ வாழ்நாள் சாதனைகளுக்காக இயற்பியலாளர் ஜெயந்த் விஷ்ணு நர்லிகருக்கு அவரது மரணத்திற்குப் பின்னதாக விக்யான் ரத்னா விருது வழங்கப்பட்டது.

❖ எட்டு அறிவியலாளர்கள் விக்யான் ஸ்ரீ விருதையும், பதினொன்கு இளம்

அறிவியலாளர்கள் விக்யான் யுவா விருதையும், ஒரு குழு விக்யான் குழு விருதையும் பெற்றனர்.

- இராஷ்ட்ரிய விக்யான் புரஸ்கார் என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இந்தியாவின் மிகவும் உயரிய தேசிய விருதாகும் என்பதோடு இது பத்ம விருதுகளைப் போலவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

# இதரச் செய்திகள்

## உலக உணவு நகரங்கள் 2025–26

- 2025–26 ஆம் ஆண்டில் உலகின் 5வது சிறந்த உணவு நகரமாக மும்பை தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசை டேஸ்ட்அட்லஸ் உலக உணவு விருதுகள் 2025–26 விருதுகளின் ஒரு பகுதியாகும்.
- நேபிள்ஸ், மிலன், போலோக்னா, புளோரன்ஸ், ஜெனோவா மற்றும் ரோம் ஆகிய இத்தாலிய நகரங்கள் முதல் 10 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன.
- மும்பை அதன் சுவை மிகு தெருவோர உணவுகளான வடா பாவ், பாவ் பாஜி, பேல்பூரி, ரக்தா பாட்டிஸ் மற்றும் மோடக் ஆகியவற்றிற்கு பிரபலமானது.
- உலகின் முதல் 100 இடங்களில் டெல்லி (48), அமிர்தசரஸ் (53), ஐதராபாத் (54), கொல்கத்தா (73), சென்னை (93) ஆகிய ஆறு இந்திய நகரங்கள் இடம்பெற்றுள்ளன.
- உள்ளூர் உணவின் நம்பகத் தன்மை, பிராந்திய உணவுகளின் புகழ் மற்றும் உலகளாவிய உணவுப் பிரியர்கள் மற்றும் நிபுணர்களின் மதிப்பீடுகளின் அடிப்படையில் நகரங்கள் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★